**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்**

S.C.No.106/2015

PW 1 (LW )

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. ராமலிங்கம்** | சாதி | |
| த/பெ | | மதம் | |
| கிராமம் | | தொழில் | **காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு** |
| தாலுக்கா | | வயது | |
| வட்டம் | | தேதி | |

**(16.02.2021) 1963ம் ஆண்டு சட்டம் 44 பிரிவு 4ன்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியமளிக்கப்பட்டது.** (சாட்சியை அவருடைய அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**எ.த.கு.வி தொடர்ச்சி**

**1வது எதிரி நகராட்சியில் வேலை பார்ப்பது எனக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்பே தெரியும்.**

**சம்பவம் நடப்பதற்கு முன்பு 1வது எதிரி அவர் பணிபுரிந்த அலுவலகத்தில் வேலை செய்யும் விஜயகுமார் என்பவர் 1வது எதிரிக்கு எதிராக உங்கள் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. அதை உதவி ஆய்வாளர் குமார் விசாரித்தார் என்று சொன்னால் தெரியாது.**

**மேற்படி புகார் மற்றும் அது சம்மந்தமான சங்கதிகளை மனித உரிமை ஆணையத்தில் நீங்கள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.**

**தற்பொழுது காண்பிக்கப்படும் அந்த பிரமாண வாக்குமூலம் நான் தாக்கல் செய்ததுதான். அது எதசாஆ-1 ஆகும்.அதில் விஜயகுமார் பற்றியும் புகார் பற்றியும் சொல்லியுள்ளேன்.அதில் விஜயகுமாருக்கும் 1வது எதிரிக்கும் முன்விரோதம் உள்ளது என சொல்லியிருக்கிறேன்.**

**எனக்கும் 2வது எதிரிக்கும் வாக்குவாதம் நடக்கும்பொழுது 1வது எதிரி சுமார் 5 நிமிடத்தில் வந்துவிட்டார்.**

**1வது எதிரி மற்றும் கூட்டங்கள் வந்த பிறகுதான் சக்திவேல் அந்த இடத்திற்கு வந்தாரா என்றால் ஆமாம். கூட்டத்தை பார்த்துவிட்டுதான் சக்திவேல் அங்கு வந்து நின்றார் என்றால் சக்திவேல் வந்தது தெரியும்.**

**மருத்துவரிடம் நான் வலது கண் வீங்கியதையும் கண் கலங்கியதையும் சொன்னேன்.**

**உதவி ஆய்வாளர் குமார் என்பவரும் மனித உரிமை ஆணையத்தில் சாட்சியம் சொல்லியுள்ளார். அப்பொழுது நான் அங்கு இருந்தேன்.**

**சம்பவத்திற்கு பிறகு நீங்களும் உதவி ஆய்வாளர் குமாரும் 1வது**

எதிரி எங்கு உள்ளார் என்பது பற்றி தேடியதாக மனித உரிமை ஆணையத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை.

உதவி ஆய்வாளர் குமார் என்பவரிடம் வழக்கு சம்பவத்தை பற்றி சொல்லும்பொழுது சம்பவம் நடந்த காவல் துறை எல்லையானது மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா குமாரிடம் சொல்லிவிட்டு அப்புறம் புகார் கொடுத்தேன்.

நான் புகாரை இரவு 10.00 மணிக்கு கொடுத்தேன்.

நீங்களும் குமாரும் மற்றும் 20 காவலர்கள் 1வது எதிரியை தேடி அன்று இரவு 08.00 மணிக்கே 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

அன்று 1வது எதிரியை நீங்கள் சட்டவிரோதமாக கைது செய்து நிலையம் கொண்டு வந்து குமார் மற்றும் காவலர்களுடன் சேர்ந்து கொலை வெறி தாக்குதல் நடத்தினீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

அந்த சங்கதியை மனித உரிமை ஆணையத்தில் குமார் சாட்சியம் சொல்லும்பொழுது மேற்படி சங்கதியை அவரே ஒத்துக்கொண்டார் என்று சொன்னால் அவர் சொன்னது உண்மைதான்.

உங்கள் காவல் நிலைய அதிகார எல்லைக்குள் இல்லாத ஒன்றை நீங்களம் குமாரும் சேர்ந்து உங்கள் நிலையத்தில் வைத்து 1வது எதிரிக்கு எதிராக அதிகார துஉஷ்புரயோகம் செய்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

அதை மறைப்பதற்காகத்தான் 02.00 மணிக்கு நடந்த சம்பவத்திற்காக பின்னிட்டு இரவு 11.00 மணிக்கு 9 மணி நேரம் கழித்து புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிக்கும் உங்களுக்கும் எந்தவித வாக்குவாதம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் உங்களை தாக்கவில்லை என்றாலும் எதிரியின் மீதுள்ள முன் விரோதம் காரணமாக பொய் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

நீங்கள் தான் 1வது எதிரியை வழிமறித்து போலிஸ் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down before / me in Open Court and read over / interpreted to the witness and acknowledge by him/her to be correct.

Principal Asst. Sessions Judge, (FAC)
Villupuram. 16.02.2021